Date 30.07.2025

LAOP No.1455/2021

CW1

Name கற்பகம்

<u>குறுக்கு விசாரணை</u>

மனுசொத்து யாருடையது என்றால் எனது கணவருக்கு சொந்தம். நான் எனது கணவருக்காக சாட்சியம் அளிக்கிறேன். மனு சொத்தின் விவரங்கள் எனக்குத் தெரியும். மனுசொத்தின் சர்வே எண் 429/2c2 Sub division ஆகும். அந்த சொத்து பெரும்பாக்கத்தில் உள்ளது என்றால் சரிதான். மேடவாக்கத்திலுந்து சோழிங்கநல்லூர் செல்வதற்கு 4 வழி சாலையாக விரிவாக்கம் செய்ய எடுக்கப்பட்டது என்றால் சரிதான். ஆர்ஜிதம் செய்யப்பட்டபொழுது சதுர அடி 1500 ரூபாய்க்கு நிர்ணயம் செய்தார்கள். தற்பொழுது சதுர அடி 20 ஆயிரம் ரூபாய் கோறி இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. கட்டிடத்திற்கு இழப்பீடாக 10 லட்சம் ரூபாய் கோறப்பட்டுள்ளது. எந்த ஆவணத்தின் அடிபப்டையில் சதுர அடிக்கு 20 ஆயிரம் ரூபாய் கேட்கிறேன் என்றால் அந்த பகுதி நல்ல முன்னேறிய பகுதி ஆகும். Hospital. IT Company ஆகியவை வந்துவிட்டது. அதனால் இழப்பீடு அதிகம் கேட்டுள்ளோம். நான் சொன்ன நிறுவனங்கள் ஆர்ஜிதம் செய்யப்பட்ட இடத்திலிருந்து 2 கிமீ தொலைவில் உள்ளது என்றால் இல்லை. அருகிலேயே உள்ளது. அந்த இடத்தில் சதுர அடி 20 ஆயிரம்

ரூபாய் விற்கப்பட்டதாக ஆவணம் எதுவும் தாக்கல் செய்யப்பட்டுள்ளேனா என்றால் இல்லை. Ex.C1 ஆவணமானது பெரும்பாக்கம் கிராமத்திலிருந்து தொலைவில் உள்ளது என்று சொன்னால் இல்லை. மெயின் ரோட்டில் உள்ளது. நில ஆர்ஜிதம் செய்த அலுவலர் அனைத்து ஆவணங்களையும் பரிசீலத்து தான் சதுர அடி 1100 ரூபாய் நிர்ணயம் செய்தார் என்றால் தவறு. இம்மனுவில் நாங்கள் கோறியுள்ள அதிகபட்ச தொகை என்றாலும் அதனால் மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்று சொன்னால் தவறு.

ம.வி.இல்லை.